*1972 சனவரி 28]*

***மாண்புமிகு திரு செ. மாதவன்:*** ஃபைனன்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் பொறுத்தவரை மத்திய அரசு, மாநில அரசு பற்றித் தனியாகப் புள்ளிவிவரம் சொன்னேன். 7 கோடி 98 லட்சம். 4 கோடி 60 லட்சம் பொறுத்தவரை குறிப்பிட்ட பிரச்சினை இதுதான். Group comprising Chairman, Vice Chairman, other private Directors of the company, professional management associates, relations, friends, companies and farmers. இவர்களும் சேர்ந்துதான் 4 கோடி 60 லட்சம். கேள்வியினுடைய சந்தேகம் மாநில அரசு மத்திய அரசு நடத்துகின்ற ஃபைனான்ஷியல் இன்ஸ்ட்யூஷன் மூலமாக இவர்கள் பணம் போட்டு தங்களுடைய பங்காக வைத்திருப்பதா என்பது. தவறான ஊகம் அது. மூன்றாவது ஐட்டமாகச் சொன்னார்கள்— funds by way of fixed capital or underwriting by financial institutions and brokers, as organised by financial institutions, banks. இது 7 கோடி 98 லட்சம்.

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** நான்கு கோடி மூலதனம் போட்ட தனியார் துறையைச் சேர்ந்த சிதம்பரம் ஏன் சேர்மனாக இருக்க வேண்டும்? அரசாங்கம் அதிகப் பணம் போட்டிருக்கும் போது அரசாங்கத்தின் சார்பில் ஏன் சேர்மனைப் போட முன்வரக்கூடாது? இப்போது இருக்கும் சேர்மன் ஆண்டுக்கு ஒருமுறை மாற்றப்படுவாரா?

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:*** போர்டு ஆப் டைரக்டர்ஸ் கூடித்தான் தலைவரைப் பற்றி முடிவு எடுப்பார்கள். தனியார் ஒருவர் தங்களுடைய ஆற்றலாலே ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். அவர்கள் 4 கோடி 60 லட்சம் போட்டாலும் அவர்கள் சார்பில் நான்கு இயக்குநர்கள்தான். நாம் அவர்களை விடக் குறைவாக, 4 கோடி 42 லட்சம் அளவுக்குப் போட்டிருந்தபோதிலும் நம்முடைய சார்பிலும் 4 டைரக்டர்கள் இருக்கிறார்கள். இதிலே மத்திய அரசாங்க இயக்குநர்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அரசாங்கத்தை மீறி எதுவும் நடந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது அரசின் கருத்தாகும்.

* 88 **வினா.—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அமைக்கப்பட இருக்கும் உர ஆலை அதன் அருகே அமைக்கப்பட இருக்கும் கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து இருக்க வேண்டுமென்று மத்திய அரசு நிபந்தனை விதித்துள்ளதா?

(இ) ஆம் எனில், நிபந்தனைகள் யாவை?

***மாண்புமிகு திரு. செ மாதவன்:*** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தூத்துக்குடியிலுள்ள இந்த உர உற்பத்திச் சாலை கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்ற கருத்திற்கு நம்முடைய மாநில அரசு எந்தவிதமான கருத்தைக் கொண்டிருக்கிறது ? அப்படி இல்லையென்றால் தனித்தனியாக அவற்றைச் செயல்படுத்த மாநில அரசாங்கத்தின் பங்கு என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது முழுக்க மத்திய அரசு நிபந்தனையோடு கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டதாகும். நாம் இதிலே முயற்சி எடுத்து இந்த உரத் தொழிற்சாலையோடு கனநீர் ஆலையும் வரவேண்டுமென்று வற்புறுத்தினோம். அப்போது காலஞ்சென்ற டாக்டர் சாராபாய் அவர்கள் பெருமுயற்சி எடுத்ததன் விளைவாக தூத்துக்குடி உரத் தொழிற்சாலையோடு இணைந்த வகையில் கனநீர் ஆலையையும் உருவாக்குவது வெற்றி பெற்றது.

### திருப்பூர் துணைச் சிறைச்சாலை

* 89 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் துணைச் சிறைச்சாலையில் சமையல் அறை மதிற்சுவர் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திருப்பூர் துணைச் சிறைச் சாலையில் ரூபாய் 17,000/— செலவில் புதிய சமையல் அறையும், உணவுக்கூடமும், குளியல் அறைகளும் கட்டுவதற்கான உத்தரவு இவ்வாண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு மதிற்சுவர் கட்டும் வேலை தற்போது ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

### குட்டைகள் அமைப்பு

* 90 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் S.F. No. 346, காசிபாளையம் கிராமம் வாரணசிபாளையத்தில் குட்டை அமைக்கும் வேலை தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ச. எண். 346, காசிபாளையம் கிராமம் வாரணசிபாளையத்தில் ரூபாய் 1,67,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் வருவாய்த்துறை (உணவு உற்பத்தி) வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆனால் இது ஒரு சிக்கனமற்ற திட்டமாகும்.